DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.268/2025

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கண்ணப்பிரான் |
| Father's / Husband Name | : | சங்கரப்பாண்டியன் |
| Village | : | |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of July 2026.

புகார்தாரர் ஆஜர் இல்லை. BNSS 279ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை (இரண்டாவது முறை):</u>

நான் கந்து வட்டி கனி என்பவருக்கு Gpay மூலம் வட்டி செலுத்தியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். 15.06.2023ல் ரூ.15 ஆயிரம், 13.07.2023ல் ரூ.5 ஆயிரம், 30.09.2023ல் ரூ.5 ஆயிரம், 17.10.2023ல் ரூ.5 ஆயிரம், 06.06.2024ல் ரூ.5 ஆயிரம், 26.08.2024ல் ரூ.5 ஆயிரம், 02.10.2024ல் ரூ.5 ஆயிரம் Gpay மூலம் நான் கந்து வட்டி கனி என்பவருக்கு செலுத்தியுள்ளேன். **மேற்படி Gpay ஆவணம் எ.சா.ஆ.2 ஆகும்.** அவருக்கு கையில் பணம் கொடுத்துள்ளேன்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்த ஆவணங்களில் வட்டிக்காக செலுத்தப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது குறுக்கு விசாரணையில் கந்து வட்டி கனிக்கு பணம் செலுத்தியதற்கு ஆவணங்கள்

இல்லை என்று கூறிவிட்டு வேறு எதற்கோ  கனிக்கு பணம்செலுத்தியதை வைத்து தற்போது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாத வட்டிக்கும், கந்து வட்டிக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. நான் கனிக்கு பணம் அனுப்பிய தொகைகள் ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட்டது இல்லை என்றால் சரிதான். நான் ஊரில் இருக்கும் போது கையில் பணம் கொடுப்பேன், வெளியூரில் இருக்கும் போது Gpay மூலம் பணம்செலுத்துவேன். கனிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் கனிக்கு பணம் செலுத்தியதாக தாக்கல் செய்த ஆவணமானது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.07 18:19:05 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam